## Indian Economy Model Test Questions 11 in Tamil With Answer

1. ஐந்தாண்டுத் திட்டத்தினை வகுப்பது

    அ. தேசிய வளர்ச்சிக் குழு ஆ. பிரதம அமைச்சரின் அலுவலகம்

    இ. ஐக்கிய நாடு சபை **ஈ. திட்டக்குழு**

2. பொருத்துக.

    அ. ஜவகர் கிராம வேலைவாய்ப்புத் திட்டம் 1. 2000-2001

    ஆ. நாட்டு சமூக உதவித் திட்டம் 2. 1993

    இ. வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் 3. 1999

    ஈ. பிரதமரின் வேலைவாய்ப்புத் திட்டம் 4. 1995

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 3 | 1 | 2 | 4 |
| ஆ. | 4 | 3 | 1 | 2 |
| **இ.** | **3** | **4** | **2** | **1** |
| ஈ. | 2 | 3 | 1 | 4 |

3. அந்நியனை வெளியேற்று:

    இந்தியாவின் நவரத்ன நிறுவனங்கள்

    அ. BHEL ஆ. BPCL இ. IOL **ஈ. IPCL**

4. நுகர்வோரியலின் தந்தை என கருதப்படுபவர்

    அ. மகாத்மா காந்தி ஆ. இந்திரா காந்தி

    இ. ஜான் F. கென்னடி **ஈ. ரால்ப் ரேடர்**

5. இந்தியாவில் பணக் கொள்கையை வடிவமைத்தவர் யார்?

    அ. இந்திய நிதியமைச்சர் **ஆ ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா**

    இ. இந்திய பிரதமர் ஈ. பன்னாட்டு நிதி நிறுவனம்

6. சரியாக பொருத்தப்படாததை கீழ்க்கண்டவற்றிலிருந்து தேர்வு செய்க.

    அ. பசுமைப் புரட்சி - வேளாண் உற்பத்தி

    ஆ. வெண்மைப்புரட்சி - பால் மற்றும் பால் பொருட்கள்

    **இ. சாம்பல் புரட்சி - எண்ணெய் வித்துக்கள்**

    ஈ. பொன் புரட்சி - பழங்கள்

7. பட்டியல் 1 ஐ பட்டியல் 2 உடன் ஒப்பிட்டு பார்த்து பொருத்தவும். கீழ்க்கண்டவற்றிலிருந்து விடையை தேர்ந்தெடுக்கவும்.

| பட்டியல் 1 | பட்டியல் 2 |
|---|---|
| அ. தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டம் | 1. 1985 |
| ஆ. ஜவஹர் ரோஜகர் யோஜனா | 2. 1993 |
| இ. இந்திரா ஆவாஸ் யோஜனா | 3. 1980 |
| ஈ. பிரதம மந்திரி ரோஜகர் யோஜனா | 4. 1989 |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 4 | 1 | 3 | 2 |
| ஆ. | 3 | 4 | 2 | 1 |
| **இ.** | **3** | **4** | **1** | **2** |
| ஈ. | 1 | 2 | 3 | 4 |

8. பொருத்துக.

| | |
|---|---|
| அ. வருமான வரி | 1. மாநில அரசின் வரியில்லா வருவாய் |
| ஆ. விற்பனை வரி | 2. மைய அரசின் வரி வருவாய் |
| இ. இரயில்வேயிலிருந்து கிடைக்கும் வட்டி வரவுகள் | 3. மைய அரசின் வரியில்லா வருவாய் |
| ஈ. கோர்ட்டு கட்டணங்கள் | 4. மாநில அரசின் வரி வருவாய் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ.** | **2** | **4** | **3** | **1** |
| ஆ. | 1 | 3 | 2 | 4 |
| இ. | 1 | 2 | 4 | 3 |
| ஈ. | 4 | 3 | 1 | 2 |

9. பின் கொடுக்கப்பட்டுள்ள துறைகளில் எந்த துறை இந்தியாவின் மொத்த நாட்டு சேமிப்பில் மிக அதிக பங்களிப்பு செய்கின்றது?

அ. பொதுத்துறை ஆ. தனியார் துறை

இ. அமைப்புசாரா துறை **ஈ. குடும்பங்களின் துறை**

10. தேசிய மேம்பாட்டு குழுவை பற்றி கீழ்க்கண்ட கூற்றுகளில் தவறானவை எது/எவை?

1. தேசிய மேம்பாட்டுக்குழு 1952 இல் அமைக்கப்பட்டது
2. தேசிய மேம்பாட்டுக்குழு சமூக மற்றும் பொருளாதார கொள்கையுடன் ஈடுபாடு கொண்டது
3. மத்திய- மாநில உறவுகளில் இது ஒரு முக்கிய நிறுவனமாகும்
4. அனைத்து அமைச்சகங்களின் முதன்மை செயலாளர்களை இது பெற்றுள்ளது.

அ. 1 ஆ. 1 மற்றும் 2 இ. 2 மற்றும் 3 **ஈ. 4**

11. வரிசை 1 உடன் வரிசை 2 யினைப் பொருத்தி வரிசைகளுக்கு கீழ் கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து சரியான விடைகளை தெரிவு செய்க.

அ. எம். ஜி. என். ஆர். இ. ஜி. ஏ. — 1. வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள், எஸ். சி/ எஸ். டி. பிரிவினருக்கு வீடு கட்டி கொடுத்தல்

ஆ. எஸ். ஜி. எஸ். ஒய் — 2. கிராம பெண்களின் பலனுக்காக

இ. ஐ. ஏ. ஒய் — 3. 100 நாள் வேலை உறுதியளிப்பு திட்டம்

ஈ. ஐ. எம். ஒய். — 4. கிராம ஏழை மக்களின் குடும்ப வருமானத்தை உயர்த்துதல்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 1 | 2 | 3 | 4 |
| ஆ | 3 | 2 | 4 | 1 |
| **இ.** | **3** | **4** | **1** | **2** |
| ஈ. | 3 | 1 | 2 | 4 |

12. மக்கள்தொகை இலாப ஈவு என்ற கருத்து வெளிப்படுத்துவது

**அ. அதிக விகித அளவில் வேலை பார்க்கும் வயதிலானவர்கள்(15 முதல் 64 வரையில்) மக்கள் தொகையில் காணப்படுவது**

ஆ. சார்ந்திருப்போரின் சதவீதம் வேலை பார்க்கும் வயதிலான மக்களை விட அதிகமாக காணப்படுவது

இ. இளைய வயதிலானவருக்கு அதிக வேலை வாய்ப்பு கிடைப்பது

ஈ. நிலையான சமச்சீரான மக்களைக் கொண்டிருப்பது

13. பட்டியல் 1ஐ பட்டியல் 2 உடன் பொருத்தி கீழ்க்கண்ட குறியீடுகளைப் பயன்படுத்தி விடை தருக.

அ. விவசாயம், காடு வளர்ப்பு, மீன்வளர்ப்பு — 1. அமைப்பு சாரா துறை

ஆ. சுரங்கத்துறை, உற்பத்தி, மின்சாரம், எரிவாயு, குடிநீர் — 2. பணிகள் துறை

இ. வர்த்தகம், போக்குவரத்து, தொலைதொடர்பு — 3. இடைநிலைத் துறை

ஈ. அமைப்பு சாரா நிறுவனங்கள், குடிமைத் தொழில்கள் — 4. முதன்மைத் துறை

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 1 | 2 | 3 | 4 |
| **ஆ.** | **4** | **3** | **2** | **1** |
| இ. | 2 | 4 | 1 | 3 |

ஈ. 3 4 1 2

14. கீழ்க்கண்ட கூற்றுகளில் ஜென் டெரிஸ் (Jean Dreze) குழு 2010, அறிக்கையின் பரிந்துரையில் குறிப்பிடப்படாத கூற்றினை சுட்டிக் காண்பிக்கவும்.

அ. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தில் (MGNREGS) கீழ் கூலி, பணவீக்கத்துடன் தொடர்புபடுத்தப்பட வேண்டும்.

**ஆ. விவசாய தொழிலாளர்களுக்குரிய கூலி மூன்று மாதங்களுக்கு ஒரு முறை விவசாய தொழிலாளர்களுக்குரிய நுகர்வோர் விலைவாசி குறியீட்டின்படி உயர்த்தி மாற்றி அமைக்கப்பட வேண்டும்**

இ. குறைந்தபட்ச கூலி சட்டம் 1948ன்ப்டி கூலி நிலைப்படுத்தப்பட வேண்டும்

ஈ. இத்திட்டத்தின்படி நாள் ஒன்றுக்கு வேலை நேரம் ஒன்பது மணி நேரத்திலிருந்து ஏழு மணி நேரமாக குறைக்கப்படுதல் வேண்டும்.

15. கீழ்க்கண்டவற்றில் எந்த அமைப்பு 2013-ல் வட்டியில்லா சம மாதாந்திர தவணைத் திட்டத்தை தடை செய்தது

அ. மத்திய அரசு

ஆ. செக்கூரிட்டீஸ் எக்ஸ்சேன்ஞ் போர்டு ஆப் இந்தியா

**இ. இந்தியா ரிசர்வ் வங்கி**

ஈ. திட்டக்குழு

16. பின் கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எது தேசிய வருவாயை கணக்கிடுவதில் பயன்படுத்துவதில்லை?

அ. உற்பத்தி முறை **ஆ. முதலீடு முறை**

இ. செலவின முறை ஈ. வருமான முறை

17. 'உணவுக்கான வேலை' என்ற திட்டத்தை மாற்றி அமைத்து மறுபெயர் சூட்டி _______ திட்டம் என அழைக்கப்பட்டது

அ. IRDP திட்டம் ஆ DPAP திட்டம் இ. RLEP திட்டம் **ஈ. NREP திட்டம்**

18. பொது நிதிப் பற்றாக்குறை =

**அ. வரவு செலவு பற்றாக்குறை + வெளிச் சந்தையில் கடன் வாங்குவது மற்றும் வாங்குவது மற்றும் கொடுக்க வேண்டியக் கடன்**

ஆ. முதன்மை பற்றாக்குறை + வட்டிச் செலுத்துதல்

இ. மொத்த வருவாய் – மொத்தச் செலவினம்

ஈ. இவை எதுவுமில்லை

19. ஆதிவாசி மகிளா சஷாக்திகரன் யோஜனா (AMSY) தொடர்பாக பின்வரும் கருத்துகளைக் கவனித்து சரியான விடை காண்க.

1. அது பழங்குடியினர் பெண்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான ஒரு தனித் திட்டமாகும்.

2. கடனுக்காக அவர்களிடமிருந்து ஆண்டிற்கு அதிக பட்சமக 6 சதவிகித வட்டி விதிக்கப்படுகிறது.

**அ. 1 மட்டும்** ஆ. 2 மட்டும்

இ. 1 மற்றும் ஆகிய இரண்டும் சரி ஈ. 1 மற்றும் 2 ஆகிய இரண்டும் தவறு

20. பத்தாவது ஐந்தாண்டு திட்டத்தில் தொழிற்துறையின் துறை ரீதியான சராசரி ஆண்டு வளர்ச்சி வீதம் யாது?

அ. 2.44 ஆ. 4.29 **இ. 8.90** ஈ. 12.10

21. கீழ்க்கண்டவற்றில் எவை 11-வது ஐந்தாண்டு திட்டத்தின் உயர்கல்வியின் நோக்கங்களாகும்?

அ. பிராந்திய சமமின்மையை குறைத்தல்

ஆ. எல்லா பல்கலைக்கழகங்களிலும் சம வாய்ப்பு அலுவலகங்களை நிறுவுதல்

இ. நகர கிராம சுகாதார வேற்றுமையை குறைத்தல்

**ஈ. சிறப்பு உதவித் தொகையின் மூலம் பொருளாதார ரீதியில் நலிவடைந்த பிரிவினருக்கு ஆதரவளித்தல்**

22. பின்வரும் கூற்றை கவனிக்க:

கூற்று(A): இந்திய அரசி நிலச்சீர்திருத்தம் மூலமாக தனிப்பட்ட நில உரிமையாளிடமுள்ள ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அதிகமாக உள்ள நிலத்தை அரசே கையகப்படுத்தி நிலமில்லா விவசாயிக்கு கொடுக்க தீர்மானித்தது

காரணம்(R): நிலத்தின் அளிப்பு மிகவும் குறைவாகவும், அதற்கு உரிமை கோருவோரின் பங்கு மிகவும் அதிகமாக இருப்பதாலும் அதனை நியாயமான வகையில் பங்கீடு செய்யும் செயல் மிகவும் அவசியமாகிறது.

இவற்றுள் பின்வரும் தொகுப்பிலிருந்து உங்கள் விடையை தெரிவு செய்க.

**அ. (A) மற்றும் (R) ஆகிய இரண்டுமே சரி. மேலும் (R) என்பது (A) க்கு சரியான விளக்கம் ஆகும்**

ஆ. (A) மற்றும் (R) ஆகிய இரண்டுமே சரி. மேலும் (R) என்பது (A) க்கு சரியான விளக்கமல்ல

இ. (A) சரி ஆனால் (R) தவறு

ஈ. (A) தவறு ஆனால் (R) சரி

23. இந்தியாவின் பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் காலம்

அ, 2007-2012 **ஆ. 2012 – 2017** இ. 2011-2016 ஈ. 2013-2018

24. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்.

கீழ்க்காணும் வங்கிகளில் எந்த வங்கி, இங்கிலாந்து (U.K) நாட்டு பன்னாட்டு வளர்ச்சிக்கான துறையுடன் (DFID) கூட்டு சேர்ந்து இந்தியாவில் நகர் புறங்களில் உள்ள குறைந்த வருவாய் பிரிவினருக்கான வீட்டு வசதி திட்டம் மேற்கொண்டுள்ளது.

**அ. தேசிய வீட்டு வசதி வங்கி**

ஆ. வீடு மற்றும் நகர வளர்ச்சிக் கழகம்

இ. பாரத ஸ்டேட் வங்கி

ஈ. இந்திய ரிசர்வ் வங்கி

25. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி.

கூற்று (A): மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு திட்ட விடுமுறைக் காலம் பின்பற்றப்பட்டது.

காரணம்(R): மூன்றாம் ஐந்தாண்டு திட்டம் இந்தியா-சீனா போரினாலும், இந்தியா-பாகிஸ்தான் போரினாலும் பாதிக்கப்பட்டது.

இவற்றுள் எது சரி என தீர்மானி?

அ. (A) மற்றும் (R) தவறானது　　ஆ. (A) தவறு மற்றும் (R) சரி

இ. (A) சரி மற்றும் (R) தவறு　　**ஈ. (A) மற்றும் (R) சரியானவை**

26. 2013-14 மத்திய அரசு வரவு செலவு கணக்கில் ரூ. 1,000 கோடி நிதி பெண்கள் அதிகாரமயமாக்கல் மற்றும் பாதுகாப்பிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த நிதியின் பெயர்

அ. அபயா நதி　　**ஆ. நிர்பயா நிதி**

இ. சௌபாக்கியா நிதி　　ஈ. சுமங்கலி நிதி

27. தனியார்மயமாக்குதல் குறித்த கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானவை எவை?

1. திறமையினை அதிகரிக்க
2. அரசின் தலையீட்டினை குறைக்க
3. சுதந்திரமாகவும், விரைந்தும் முடிவு எடுப்பதினை அதிகரிக்க
4. அரசு தன் பொறுப்புகளை கை கழுவ
5. போட்டியினை அறிமுகப்படுத்தி, தனியார் துறைக்குரிய பண்புகளை வளர்க்க.

அ. 1, 2 மற்றும் 5 சரியானவை　　**ஆ. 1,2,3 மற்றும் 5 சரியானவை**

இ. 1,3,4 மற்றும் 5 சரியானவை　　ஈ. 13, மற்றும் 5 சரியானவை

28. 2007ஆம் ஆண்டு இந்தியாவில் தனிநபர் எரிசக்தி நுகர்வின் அளவு _______ கிலோ கிராம் எண்ணை பதலீட்டுக்கு சமம்.

**அ. 529**　　ஆ. 592　　இ. 295　　ஈ. 925

29. இந்தியாவின் 2013-14 வரவு-செலவு திட்டத்தின்படி, எத்தனை விழுக்காடு நடப்பு வருவாய் செலவில் வட்டியாகச் செலுத்தப்படுகிறது?

அ. 16 விழுக்காடு **ஆ. 26 விழுக்காடு**

இ. 28 விழுக்காடு ஈ. 32 விழுக்காடு

30. தமிழ்நாட்டில் 2009-10ல் தனிநபர் வருமானத்தில் முதலிடத்தில் பெற்ற மாவட்ட எது?

அ. சென்னை ஆ. திருவள்ளூர்

இ. கோயமுத்தூர் **ஈ. கன்னியாகுமரி**

31. 1977ம் ஆண்டு இந்திய தொழில் கொள்கையில் ஊடுருவிச் சென்ற கூற்று

அ. பேரளவு தொழில் நிறுவனங்களை மேம்படுத்துவது

ஆ. அடிப்படை தொழிலகங்களை முன்னேற்றுவது

**இ. சிறிய மற்றும் குடிசைத் தொழில்களை ஊக்குவிப்பது**

ஈ. வேளாண் மற்றும் சார்ந்த நடவடிக்கைகளை ஊக்குவிப்பது

32. 2004-ல் சந்தையை நிலைப்படுத்தும் திட்டத்தினை இந்திய ரிசர்வ் வங்கி துவங்கியது

அ. இந்திய நாணயத்தை வாங்கவும், விற்பனை செய்வதற்கும்

**ஆ. நீர்மைத் தன்மையினை சரிசெய்வதற்கான ஒரு அதிகப்படியான ஊடகமாக**

இ. வட்டி வீதத்தை குறைந்த நிலையில் தீர்மானிப்பதற்காக

ஈ. பொது விலை நிலையினை கட்டுப்படுத்துவதற்காக

33. 2009ம் ஆண்டின் இந்தியாவில் வறுமையை மதிப்பீடு செய்யும் நெறிமுறையை ஆய்வு செய்யும் குழு இவரது தலைமையில் அமைந்தது

அ. வி. எம். டாண்டேகர் ஆ. எல். ஆர். ஜெயின்

இ. மார்டின் ரவாலியன் **ஈ. எஸ். டி. டெண்டுல்கர்**

34. இந்தியாவில் செலவு வரி இவரால் அறிமுகம் செய்யப்பட்டது

**அ. டி. டி. கிருஷ்ணமாச்சாரி** ஆ. சி. இராஜகோபாலாச்சாரி

இ. யஷ்வந்த் சின்ஹா ஈ. ஆர். வெங்கட்ராமன்

35. கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனி:

கூற்று (A): புதிய பொருளாதாரக் கொள்கைப்படி உலகமயமாதல் வளர்ச்சிக்கான ஒரு கருவியாகக் கருதப்படுகிறது.

காரணம்(R): உலகமயமாதல் போக்குவரத்து மற்றும் தொலை தொடர்புக்கான செலவை அதிகரிக்கிறது.

இவற்றுள் சரியான விடை எது

**அ. (A) சரியானது ஆனால் (R) தவறானதாகும்**

ஆ. (A) தவறானது ஆனால் (R) சரியானதாகும்

இ. (A) மற்றும் (R) இரண்டும் தவறானவை

ஈ. (A) மற்றும் (R) இரண்டும் சரியானவை மற்றும் (R) – (A) க்கான சரியான விளக்கம் அல்ல.

36. பிப்ரவரி 2006ஆம் ஆண்டு சிறப்பு பொருளாதார மண்டலம் குறித்த சட்டம் இயற்றப்பட்டது. இவற்றின் குறிக்கோள் எதுவல்ல என்பதை அடையாளம் காண்.

அ. கூடுதலான பொருளாதார நடவடிக்கைகளை உருவாக்குவது

**ஆ. இறக்குமதியை ஊக்குவிப்பது**

இ. வேலை வாய்ப்பை உருவாக்குவது

ஈ. கட்டுமான வசதிகளை உருவாக்குவது

37. கீழே கொடுக்கப்பட்டுள்ள கருத்துருவில், காரணம், விளக்கத்தை ஆய்வு செய்து, கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து சரியான விடையை தேர்வு செய்

கூற்று(A): வங்கி வட்டாரத்தில் 'ரத்னாகர் வங்கியை' 'நான்காம் நெடுஞ்சாலை வங்கி' என அழைக்கின்றனர்.

காரணம்(R): இவ்வங்கியின் பெரும்பாலான வர்த்தகம், இந்நெடுஞ்சாலையில் உள்ள மக்கள் தொகை மிகுந்த 10 நகரங்களில் மேற்கொள்ளப்படுகிறது.

**அ. (A) மற்றும் (R) இரண்டும் சரி, (A) வின் சரியான விளக்கம் (R) ஆகும்.**

ஆ. (A) சரி (R) தவறு

இ. (A) சரி, ஆனால் (A)விற்கு (R) சரியான விளக்கம் அல்ல

ஈ. (A) மற்றும் (R) இரண்டும் தவறு

38. 1969-ம் ஆண்டு இந்திரா காந்தி ஆட்சியின் போது எத்தனை இந்திய தனியார் வங்கிகள் தேசியமாக்கப்பட்டது?

அ. 10 ஆ. 11 **இ. 14** ஈ. 20

39. வளர்ச்சி குன்றிய நாடுகளில் வெளிநாட்டு நிதியானது கீழ்க்காணும் இடைவெளிகளை நிரப்பச் செய்கிறது.

1. சேமிப்பு இடைவெளி
2. அந்நிய செலவாணி இடைவெளி
3. தொழில்நுட்ப மற்றும் நிர்வாக இடைவெளி
4. இயற்கை வள இடைவெளி

அ. 2 மற்றும் 3 **ஆ. 1 , 2 மற்றும் 3**

இ. 1 மற்றும் 2 ஈ. 2 மட்டும்

40. கீழ்க்கண்டவற்றுள் எதனுடைய வளர்ச்சி முக்கிய நோக்கமாகவும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு அவசிய நிபந்தனையாகவும் திகழ்கிறது?

**அ. வேளாண் மற்றும் சார்ந்த துறைகள்** ஆ. தொழிற்துறை

இ. சேவைத் துறைகள் ஈ. வெளியுறவுத் துறைகள்

41. டங்கன் திட்டம் இதனுடன் தொடர்புடையதாகும்

**அ. காட் ஒப்பந்தம்** ஆ. ஐக்கிய நாட்டு அவை

இ. பன்னாட்டு நிதி ஈ. உலக வங்கி

42. கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனி:

கூற்று I: மொத்த நாட்டு உற்பத்தி எப்பொழுதும் மொத்த உள்நாட்டு உற்பத்தியை விட அதிகமாகவே இருக்கும்.

கூற்று II: மொத்த நாட்டு உற்பத்தியை பெறுவதற்கு, மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் நிகர காரணிகளின் வருமானத்தையும் சேர்க்க வேண்டும்.

இவற்றுள் சரியான விடை எது?

அ. இரண்டு கூற்றுகளுமே தனித்தனியே உண்மை. மேலும் கூற்று II கூற்று I க்கு சரியான விளக்கமாகும்.

ஆ. இரண்டு கூற்றுகளுமே தனித்தனியே சரியானவை. மேலும் கூற்று II கூற்று I க்கு சரியான விளக்கமல்ல

இ. கூற்று I சரியானது, ஆனால் கூற்று II தவறானது

**ஈ. கூற்று I தவறானது, ஆனால் கூற்று II சரியானது**

43. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி:

கூற்று(A): விலைக் கொள்கை நிதிப் பற்றாக்குறையை கீழ்க்கட்டுப்படுத்தும் நோக்கம் உடையதாகும்.

காரணம்(R): நிதிப்பற்றாக்குறை பணவீக்க அழுத்தத்தை உண்டாக்கும்.

இவற்றுள் சரியான விடை எது?

அ. (A) சரியானது ஆனால் (R) தவறானதாகும்

ஆ. (A) தவறானது ஆனால் (R) சரியானதாகும்

இ. (A) மற்றும் (R) இரண்டும் தவறானவை ஆகும்

**ஈ. (A) மற்றும் (R) இரண்டும் சரியானவை மற்றும் (A) க்கு (R) சரியான விளக்கமாகும்**

44. 2009-10ல் 2004-05 விலையில் கீழ்க்கொடுக்கப்பட்டுள்ள மாநிலங்களில் எது மிக அதிக தலா உள்நாட்டு உற்பத்தி சராசரி ஆண்டு வளர்ச்சி வீதத்தை அடைந்தது?

அ. பீகார் ஆ. தமிழ்நாடு

**இ. குஜராத்** ஈ. கேரளா

45. கீழ்க்கண்டவற்றுள் சரியாக பொருத்தப்பட்டுள்ளது எது?

1. முதல் நிதிக்குழு - தலைவர் K. சந்தானம்
2. இரண்டாவது நிதிக்குழு - தலைவர் கே. சி. நியோகி
3. மூன்றாவது நிதிக்குழு - தலைவர் ஏ. கே. சந்தா
4. நான்காவது நிதிக்குழு - தலைவர் கே. பிரமானந்த ரெட்டி

அ. 1 ஆ. 2 **இ. 3** ஈ. 4

46. பங்கு பெற்று பயிர் செய்பவர்களில் பாதுகாப்பிற்காக மேற்கு வங்காள அரசு எடுத்த நடவடிக்கை

**அ. பர்கா செயல்பாடு** ஆ. பசுமை செயல்பாடு

இ. வெண்மைப் புரட்சி ஈ. நீல நட்சத்திர செயல்பாடு

47. இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் உருவான போது, இந்திய திட்டத்திற்கு யாரால் மாற்று முறை கொடுக்கப்பட்டது?

அ. பி. சி. மஹலநோபிஸ்

**ஆ. சி. என். வக்கீல் மற்றும் பி. ஆர். பிரம்மானந்தா**

இ. நர்க்ஸ்

ஈ. சும்பீட்டர்

48. பணவீக்கத்தை குறைப்பதற்காக கீழ்க்கண்டவற்றில் எவை பரிந்துரைச் செய்யப்படுகிறது?

1. தேவை மேலாண்மை நடவடிக்கைகள்
2. அளிப்பு மேலாண்மை நடவடிக்கைகள்
3. வர்த்தகம் மற்றும் வரிக் கொள்கைகளை ஒழுங்குபடுத்துதல்

அ. 1 மட்டும் ஆ. 1 மற்றும் 2

**இ. 1, 2 மற்றும் 3** ஈ. 3 மட்டும்

49. இந்தியாவில் பொதுத்துறை நிறுவனங்களின் முதலீட்டை கணிசமான அளவு விலக்கிக் கொள்ள தீர்மானித்தக் குழு

**அ. ரங்கராஜன் குழு** ஆ. அர்ஜுன் செனகுப்தா குழு

இ. தாராப்பூர் குழு ஈ. நரசிம்மம் குழு

50. பணவீக்கம் என்பது கீழ்க்கண்ட நிலையைக் குறிக்கும்:

**அ. விலைவாசி உயர்வும் – பணத்தின் மதிப்பு வீழ்ச்சியும்**

ஆ. விலைவாசி உயர்வும் – பணத்தின் மதிப்பு உயர்வும்

இ. விலைவாசி வீழ்ச்சியும் – பணத்தின் மதிப்பு வீழ்ச்சியும்

ஈ. விலைவாசி வீழ்ச்சியும் – பணத்தின் மதிப்பு உயர்வும்

51. கீழ்க்கண்டவற்றுள் எது சரியல்ல என தீர்மானிக்க:

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் கொடுக்கப்பட்டுள்ளன. எது தவறு?

அ. வரி விதிப்பை அதிகப்படுத்துதல்

**ஆ. அரசின் செலவினத்தை அதிகரித்தல்**

இ. இறக்குமதியில் கட்டுப்பாடுகள் விதித்தல்

ஈ. பொதுப்பங்கீடு

52. இந்திய ரிசர்வ் வங்கியிடம் ஒவ்வொரு வங்கியாக ஒரு குறிப்பிட்ட தொகையை ரொக்க இருப்பாக வைப்பது

அ. மாறுபடும் காப்பு விகிதம் **ஆ. ரொக்க இருப்பு விகிதம்**

இ. ரொக்க தள்ளுபடி விகிதம் ஈ. வியாபாரத் தள்ளுபடி விகிதம்

53. பொருத்துக.

அ. முதலாம் ஐந்தாண்டு திட்டம் 1. வறுமை ஒழிப்பு

ஆ. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் 2. சமத்துவம் மற்றும் சமூகநீதி

இ. ஐந்தாம் ஐந்தாண்டு திட்டம் 3. தொழிற்துறை வளர்ச்சி

ஈ. பத்தாம் ஐந்தாண்டு திட்டம் 4. வேளாண்மை

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ.** | **4** | **3** | **1** | **2** |
| ஆ. | 2 | 1 | 3 | 4 |
| இ. | 1 | 3 | 4 | 2 |
| ஈ. | 2 | 4 | 1 | 3 |

54. கீழ்க்காண்பனவற்றுள் எது பொதுத்துறை நிறுவனம்?

**அ. பெல் (BHEL)** ஆ. ரிலையன்ஸ் (Reliance)

இ. டாடா(TATA) ஈ. அசோக் லைலேண்ட் (Ashok Leyland)

55. பொருத்துக:

அ. சக்ஷர் பாரத் 1. இடைநிலைக் கல்வி

ஆ. ராஷ்ட்ரிய மத்யமிக் சிக்ஷ அபியான் (RMSA) 2. தொடக்கக் கல்வி

இ. சர்வ சிக்ஷ அபியான் (SSA) 3. உயர்கல்வி

ஈ. இந்திய தொழில்நுட்ப நிறுவனம் 4. பெண்கல்வி

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ.** | **4** | **1** | **2** | **3** |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆ. | 1 | 4 | 3 | 2 |
| இ. | 4 | 2 | 1 | 3 |
| ஈ. | 4 | 3 | 1 | 2 |

56. கீழ்க்கண்டவற்றுள் சரியாக பொருத்தப்பட்டுள்ளது எது?

1. இரட்டை விலை – அரசு மற்றும் தனியார் விலை
2. பொது பங்களிப்பு திட்டம் – நுகர்வோர் பாதுகாப்பு
3. நிதிக்கொள்கை – வங்கி நிர்வாகம்

அ. 1 மட்டும் ஆ. 2 மட்டும்

**இ. 1, 2 மற்றும் 3** ஈ. 4 மட்டும்

57. பின்வரும் வாக்கியத்தை கருத்தில் கொண்டு சரியான விடையை கீழே குறிப்பிட்டுள்ள குறியீடுகலீலிருந்து தேர்ந்தெடு.

வலியுறுத்தல் (A): நிதிநிலை பற்றாக்குறையானது ஒரு மோசமான கவலையாகும்

காரணம் (R): நிதிநிலை பற்றாக்குறையானது பண அளிப்பின் அதிக வளர்ச்சி வீதத்திற்கு அடிகோலுகிறது.

**அ. (A) மற்றும் (R) ஆனது தனிப்பட்ட அளவில் சரி ஆனால் (R) ஆனது (A) ன் சரியான விளக்கம்**

ஆ. (A) மற்றும் (R) ஆனது தனிப்பட்ட அளவில் சரி ஆனால் (R) ஆனது (A) ன் சரியான விளக்கமல்ல

இ. (A) சரி, ஆனால் (R) தவறு

ஈ. (A) தவறு ஆனால்(R) சரி

58. கீழே கொடுக்கப்பட்டுள்ள வரையறைகளுடன் தொடர்புடையது எது?

பொருளின் அடக்க விலை உயர்வதால் அதனின் விலையும் உயருகிறது.

**அ. செலவு உந்துதல் பணவீக்கம்** ஆ. தேவை இழுப்பு பணவீக்கம்

இ. அடையாள பணவீக்கம் ஈ. படரும் பணவீக்கம்

59. கீழ்க்கண்ட வாக்கியங்களை ஆழ்ந்து ஆராயவும்.

1. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (1199-2000) நடப்பு சம்பந்தப்பட்ட நடவடிக்கை பங்கு (2007ல்) 30% லிருந்து 20% குறைந்துள்ளது
2. முதன்மை மற்றும் அதனை சார்ந்த விவசாயத்தில் (2007) வேலை செய்பவர்கள் 57% லிருந்து 64% அதிகரித்துள்ளது
3. 3/5-ந்து வேலை செய்பவர்கள் விவசாயத்தினை நம்பி இருப்பது
4. கினி கெழுவின் படி சமனின்மை அளவு ( 2007) 0. 43 லிருந்து 0. 48 அதிகரிப்பது

சரியான விடையினை தேர்ந்தெடுக்கவும்.

அ. 1 மற்றும் 3 சரி **ஆ. 1,3 மற்றும் 4 சரி**

இ. 1 மற்றும் 2 சரி ஈ. மேற்கண்ட நன்கு வாக்கியங்கள் சரியானது

60. 1981-லிருந்து 2009 வரையில் உள்ள வருடங்களில் விவசாய உற்பத்தியின் மதிப்பின் பங்கு குறிப்பிடுவது

1. தானிய பங்கு குறைந்ததால்
2. பயறு வகையின் பங்கு அதிகரித்ததால்
3. பழம் மற்றும் காய்கறிகளின் பங்கு அதிகரித்தால்
4. எண்ணெய் விதைகளின் மொத்தமான மதிப்பின் பங்கு அதிகரித்தல்

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டெண் கொண்டு சரியான விடையினை தேர்ந்தெடுக்கவும்.

அ. 1 மட்டும் ஆ. 1 மற்றும் 3 மட்டும்

**இ. 1,3 மற்றும் 4 மட்டும்** ஈ. 1,2,3 மற்றும் 4

61. பின்வரும் வாக்கியத்தை கருத்தில் கொண்டு, சரியான விடையை கீழே குறிப்பிட்டுள்ள குறியீடுகளிலிருந்து தேர்ந்தெடு.

கூற்று (A): பொருளாதார பின்னடைவு உள்ள சமயம் பொருளாதார நடவடிக்கை பின்னடையும்.

காரணம் (R): பணஅளிப்பு வளர்ச்சி வீதத்தில் ஏற்படும் கூர்மையான குறைவு பொதுவாக பொருளாதார நடவடிக்கையை குறைக்கும்.

அ. (A) மற்றும் (R) ஆனது தனிப்பட்ட அளவில் சரி ஆனால் (R) ஆனது (A) ன் சரியான விளக்கமல்ல

**ஆ. (A) மற்றும் (R) ஆனது தனிப்பட்ட அளவில் சரி ஆனால் (R) ஆனது (A) ன் சரியான விளக்கம்**

இ. (A) சரி ஆனால் (R) தவறு

ஈ. (A) தவறு ஆனால் (R) சரி

62. பின்வரும் மாநிலங்களை விவசாய வருமான வரி செலுத்தப்பட்ட அடிப்படையில் வரிசைப்படுத்துக.

அ. அஸ்ஸாம், ஜம்மு மற்றும் காஷ்மீர், மைசூர், தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்காளம்

ஆ. ஜம்மு காஷ்மீர், அஸ்ஸாம், தமிழ்நாடு, மேற்கு வங்காளம் மற்றும் மைசூர்

**இ. ஜம்மு காஷ்மீர் , அஸ்ஸாம், தமிழ்நாடு, மைசூர் மற்றும் மேற்கு வங்காளம்**

ஈ. மேற்கு வங்காளம், அஸ்ஸாம், தமிழ்நாடு, ஜம்மு காஷ்மீர் மற்றும் மைசூர்

63. பத்தாவது ஐந்தாண்டு திட்டத்தில் (2002-07) இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி வீதம்

1. 4.5% 2. 6.5% 3. 8.0% 4. 7.6%

அ. 3 **ஆ. 4** இ. 2 ஈ. 1

64. கீழ்க்கண்ட இந்திய வேளாண்மைத்துறை வாக்கியங்களை ஆழ்ந்து ஆராய்ந்து சரியான விடையினை தேர்ந்தெடுக்கவும்.

1. 2011-2012 (அதிகபட்ச அளவின் படி) அஸ்ஸாம், பீகார், மேற்கு வங்காளம், ஜார்கண்ட் மற்றும் உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்கள் அரிசி உற்பத்தியில் வளர்ச்சியடைந்துள்ளது.

2. 2011-12ல் உணவு தானிய உற்பத்தியில் மிக முக்கியமாக வளர்ச்சியடைந்துள்ளது

3. மத்தில் குவிக்கப்பட்ட உணவு தானிய கையிருப்பு தேசிய பங்கீட்டின் 2012 எதிர்பார்ப்பினை நிறைவு செய்ய இயலவில்லை

அ. 1 மட்டும் ஆ. 2 மட்டும்

**இ. 1 மற்றும் 2 மட்டும்** ஈ. 1,2 மற்றும் 3

65. வரிசை 1 உடன் வரிசை 2னைப் பொருத்தி வரிசைகளுக்கு கீழ் கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து சரியான விடையினைத் தெரிவு செய்க.

| வரிசை 1 | வரிசை 2 |
|---|---|
| அ. பங்கு விலக்குதல் | 1. அயல்நாட்டு நிறுவனம் |
| ஆ. பன்னாட்டு நிறுவனம் | 2. அரசின் பங்குகளை விற்பது |
| இ. அயல்நாட்டு செலுத்துநிலை | 3. திட்டக்குழு |
| ஈ. Dr.N.J. சூரியன் | 4. அயல்நாட்டு வணிகம் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 2 | 4 | 1 | 3 |
| ஆ. | 2 | 3 | 1 | 4 |
| **இ.** | **2** | **1** | **4** | **3** |
| ஈ. | 2 | 4 | 3 | 1 |

66. நேரு-மஹலநோபிஸ் மாதிரி மிகுந்த ஊக்கத்தை நுகர்வு பொருள்களை உற்பத்தி செய்யும் ______ தொழிற்சாலைகளுக்கு கொடுத்தது.

அ. கனரக ஆ. இலேசான

**இ. சிறு மற்றும் குறுந்தொழில்கள்** ஈ. மேற்சொன்ன எதுவும் அல்ல

67. பொருத்துக.

| | |
|---|---|
| அ. தேசிய திட்டமிடல் | 1. 2004 |
| ஆ. புதிய கம்பெனிக் கொள்கை | 2. 1992 |
| இ. 74 வது சட்டதிருத்தம் | 3. 1991 |
| ஈ. 14 - வது லோக் சபா தேர்தல் | 4. 1938 |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 4 | 2 | 3 | 1 |
| ஆ. | 3 | 1 | 4 | 2 |
| இ. | 2 | 3 | 1 | 4 |
| **ஈ.** | **4** | **3** | **2** | **1** |

68. பின்வரும் வாக்கியத்தை கருத்தில் கொண்டு, சரியான விடையை கீழே குறிப்பிட்டுள்ள குறியீடுகளிலிருந்து தேர்ந்தெடு.

வலியுறுத்தல் (A): ஒரு நாட்டில் உள்ள பண அளிப்பாகாது தொடர்ச்சியாக மற்றும் வேகமான வீதத்தில் உயரும்போது ஒரு நாடு அதன் உற்பத்தியை அதிகப்படுத்தும் பணவீக்கம் ஏற்படும்.

காரணம் (R): பண அளிப்பின் வேகமான வளர்ச்சி அதிகரிப்பு வீதமானது, உற்பத்தி அதிகரிப்பு மூலமாக வாழ்க்கை தரத்தை உயர்த்தும்.

அ. (A) மற்றும் (R) ஆனது தனிப்பட்ட அளவில் சரி ஆனால் (R) ஆனது (A) ன் சரியான விளக்கமல்ல

ஆ. (A) மற்றும் (R) ஆனது தனிப்பட்ட அளவில் சரி ஆனால் (R) ஆனது (A) ன் சரியான விளக்கம்

**இ. (A) சரி ஆனால் (R) தவறு**

ஈ. (A) தவறு ஆனால் (R) சரி

69. பணமானது பெரும்பான்மையான தாக்கத்தை இதன் மீது கொண்டுள்ளது.

அ. பணவீக்கம் ஆ. பணவீக்கம் மற்றும் வாணிபச் சுழற்சி

இ. முதலீடு **ஈ. பணவீக்கம், வாணிபச் சுழற்சி மற்றும் முதலீடு**

70. பின்வரும் வாக்கியத்தை கருத்தில் கொண்டு, சரியான விடையை கீழே குறிப்பிட்டுள்ள குறியீடுகளிலிருந்து தேர்ந்தெடு.

வலியுறுத்தல் (A): பணவீக்கம் உள்ள காலங்களில் மற்ற சொத்துக்கள் அதிகமான பாதுகாப்பு மதிப்பு கொண்டு இருந்தாலும் மக்கள் பணத்தையே இன்னும் பிடித்து கொண்டு உள்ளார்கள்.

காரணம் (R): பணமானது ஒரு பரிவர்த்தனை சாதனம், நீர்மைத் தன்மை மற்றும் பிரிக்கக் கூடியது.

அ. (A) மற்றும் (R) சரி. ஆனால் (R) ஆனது (A) ன் விளக்கம் கிடையாது

**ஆ. (A) மற்றும் (R) சரி. ஆனால் (R), (A) ன் விளக்கம் ஆகும்.**

இ. (A) சரி, ஆனால் (R) தவறு

ஈ. (A) தவறு. ஆனால் (R) சரி

71. பின்வரும் கூற்றினை ஆராய்க.

1. எதிர்காலத்தில் அதிகமான பொருள்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்வதற்காக வாங்கப்படும் பொருள்கள்

2. வெளிநாட்டவர்களால் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை வாங்குதல்- உள்நாட்டில் வாங்கப்படும் வெளிநாட்டு பொருட்கள்

(1) மற்றும் (2) எதைக் குறிக்கிறது?

அ. நுகர்வு மற்றும் முதலீடு ஆ. நுகர்வு மற்றும் நிகர ஏற்றுமதி

இ. அரசு கொள்முதல் மற்றும் முதலீடு **ஈ. முதலீடு மற்றும் நிகர ஏற்றுமதி**

72. இந்தியாவில் முதலாம் ஐந்தாண்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு

அ. 1947 **ஆ. 1951** இ. 1956 ஈ. 1961

73. வரிசை 1 உடன் வரிசை 2ஐ பொருத்தி வரிசைகலுக்கு கீழ் கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து சரியான விடையை தெரிவு செய்க.

| வரிசை 1 | வரிசை 2 |
|---|---|
| அ. நெல் உற்பத்தி | 1. பஞ்சாப் மற்றும் ஹரியான |
| ஆ. கோதுமை உற்பத்தி | 2. கூர்க் மற்றும் நீலகிரி |
| இ. சணல் உற்பத்தி | 3. உத்திரபிரதேசம் மற்றும் மேற்குவங்காளம் |
| ஈ. காப்பி உற்பத்தி | 4. மேற்குவங்காளம் மற்றும் அசாம் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 1 | 2 | 4 | 3 |
| ஆ. | 2 | 1 | 4 | 3 |
| இ. | 1 | 3 | 4 | 2 |
| **ஈ.** | **3** | **1** | **4** | **2** |

74. கூட்டாண்மைப் பதிவு

அ. கட்டாயம் **ஆ. விருப்பத்தின் பேரில்**

இ. அவசியமில்லை ஈ. கட்டாயமில்லை

75. பொருத்துக,

| | |
|---|---|
| அ. முதல் நிலைத் தொழில் | 1. வெளிர் சிவப்பு கழுத்துப் பட்டை தொழிலாளர் |
| ஆ. இரண்டாம் நிலைத் தொழில் | 2. சிவப்பு கழுத்துப் பட்டை தொழிலாளர் |
| இ. மூன்றாம் நிலைத் தொழில் | 3. வெள்ளை கழுத்துப் பட்டை தொழிலாளர் |
| ஈ. நான்காம் நிலைத் தொழில் | 4. நீல கழுத்துப் பட்டை தொழிலாளர் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 2 | 3 | 4 | 1 |

ஆ. 1 2 3 4

**இ. 2 4 1 3**

ஈ. 4 3 2 1

76. இந்தியாவில் உணவிற்கான மானிய வகைகளில் உள்படாததை தேர்ந்தெடு.

அ. மானியமாக விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் ஊக்க விலை

ஆ. மானியமாக பொது வினியோகத் திட்டத்தின் மூலம் நுகர்வோர்களுக்கு அளிப்பது

இ. மானியமாக உணவுப் பாதுகாப்பு கழகத்திற்கு வழங்குவது

**ஈ. நல்வள உரத்துக்கான மானியம்**

77. மூலதன ஆக்க அமைவு அளவை இந்தியாவில் எந்த நிறுவனம் மேற்கொள்கிறது?

**அ. மத்திய புள்ளியியல் நிறுவனம்** ஆ. இந்திய ரிசர்வ் வங்கி

இ. மாநில பணபெட்டகம் ஈ. வட்டார வங்கிகள்

78. இந்தியாவின், தேசிய வருமானத்தின் வேளாண் துறையில் மொத்த வீட்டிற்கான உற்பத்திப் பொருள் பங்கு 2012-13 ல் ________ஆகும்.

அ. 55.0 விழுக்காடு ஆ. 38.0 விழுக்காடு

**இ. 13.7 விழுக்காடு** ஈ. 31.7 விழுக்காடு

79. பொதுவுடைமை ஜனநாயகம் பற்றிய கீழ்க்கண்ட கூற்றுகளில் தவறான கூற்றினை சுட்டிக் காண்பிக்கவும்.

அ. பொதுவுடைமை ஜனநாயகத்தின் நோக்கம் வறுமையை ஒழிப்பது

**ஆ. சமுதாயத்தில் உள்ளவர்களின் செல்வம், வருமானம் இவற்றின் சமமற்ற நிலையினை குறைத்தல்**

ஈ. அனைவருக்கும் சமமான வாய்ப்பு அளித்தல்

80. ‘பணமதிப்பு குறைப்பு, நாணய ஆணையுரிமை உட்பட்ட முறையாகும்’

இந்த கூற்று கீழே கொடுக்கப்பட்டுள்ள எந்த கருத்துக்கு பொருத்தமுடையாகும்.

**அ. ஒரு நாட்டின் ஏற்றுமதி அளவினை அதிகரிப்பதற்காக அந்நாடு தனது உள்நாட்டு பணத்திற்கான பன்னாட்டு மதிப்பினை குறைக்கும் செயல் நடவடிக்கை**

ஆ, உள்நாட்டு பண அளவினை அதிகரிக்கும் முயற்சி

இ. நடப்பு கணக்கு பற்றாக்குறையினை அதிகரிக்கும் முயற்சி

ஈ. பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் முயற்சி

81. இந்தியாவின் முதல் “மகளிர் வங்கி” என்ற யோசனை ________ மத்திய வரவு-செலவு திட்டத்தினை முன் வைக்கப்பட்டது.

**அ. 2013-14** ஆ. 2012-13 இ. 2011-12 ஈ. 2010-11

82. NREP மற்றும் RLEGP இரண்டினையும் இணைத்து ஏப்ரல் 1989ல் தொடங்கிய திட்டம் எது?

அ. TRYSEM ஆ. IRDP இ. SEPUP **ஈ. JRY**

83. ஆண்டு திட்டம் செயல்படுத்தப்பட்ட ஆண்டு

அ. 1962-1965 ஆ. 1965-1967

**இ. 1966-1969** ஈ. 1967-1970

84. அரசால் வசூல் செய்யப்படும் வரிப்பணம் எந்த நிதியில் சேரும்?

**அ. தொகு நிதி** ஆ. அவசரகால நிதி

இ. பொது கணக்கு ஈ. தனியார் கணக்கு

85. முதலீட்டு குறைப்பு எதை ஏற்படுத்தாது?

1. பொது வளங்களை வெளிகொணர்வது
2. பொதுக் கடனை குறைப்பது
3. தனியார் மயமாக்கம் குறைப்பது
4. வேலை வாய்ப்பு அதிகரிப்பது

அ. 1 மற்றும் 2 மட்டும் ஆ. 3 மட்டும்

**இ. 4 மட்டும்** ஈ. 2 மற்றும் 3 மட்டும்

86. 2012-2013 ல் மொத்த மூலதன திரட்சி இந்தியாவின் மொத்த ஊள்நாட்டு வருமானத்தில் எத்தனை சதவிகிதம் உள்ளது?

அ. 24% ஆ. 28% இ. 32% **ஈ. 34%**

87. இந்திய வேளாண்மை உற்பத்தியில் புதிய முறைகளும் அதிக விளைச்சல் தரும் விதைகள் HYV எந்த திட்ட காலத்தில் தொடங்கப்பட்டது?

அ. இரண்டாம் திட்டம் ஆ. மூன்றாம் திட்டம்

**இ. ஆண்டு திட்டம்** ஈ. ஐந்தாம் திட்டம்

88. ஒரு பொருளாதாரத்தில் அதிக அளவு பணம் குறைந்த அளவு பொருட்களை விரட்டும் நிலை

அ. பொருளாதார மந்தநிலை ஆ. நிறைவு நிலை

**இ. பணவீக்கம்** ஈ. பண வாட்டம்

89. கீழ்க்காணும் நிதிக்குழுக்களை அவற்றின் தலைவர்களோடு பொருத்துக.

| நிதிக்குழு | தலைவர் |
|---|---|
| அ. பதினொன்றாவது | 1. சி. ரங்கராஜன் |
| ஆ. பனிரெண்டாவது | 2. ஏ. எம். குஸ்ரோ |
| இ. பதின்மூன்றாவது | 3. விஜய் கேல்கர் |

அ ஆ இ

அ. 1 3 2

**ஆ. 2 1 3**

இ. 1 2 3

ஈ. 3 2 1

90. தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கம் 2007-08 ல் எந்த நோக்கத்திற்காக துவங்கப்பட்டது?

அ. அரிசி, கோதுமை மற்றும் பருப்பு வகைகளின் சாகுபடி நில அளவை அதிகரிக்க

**ஆ. அரிசி, கோதுமை மற்றும் பருப்பு வகைகளின் உற்பத்தியை அதிகரிக்க**

இ. அரிசி, கோதுமை மற்றும் பருப்பு வகைகளின் ஏற்றுமதியை அதிகரிக்க

ஈ. நாட்டில் ஊட்டச்சத்து குறைபாட்டை குறைக்க

91. இந்தியாவில் நிதிக்குழு எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை அமர்த்தப்படுகிறது?

அ. மூன்று ஆ. நான்கு **இ. ஐந்து** ஈ. ஆறு

92. நம் நாட்டு பொருளாதாரத்தை உலக பொருளாதாரத்துடன் ஒருங்கிணைப்பது என்பது

அ. தாராளமயமாக்குதல் **ஆ. உலகமயமாதல்**

இ. தனியார்மயமாதல் ஈ. தேசியமயமாதல்

93. இந்தியாவில் நிதிஆண்டு எப்போது துவங்குகிறது?

அ. மார்ச் 31 **ஆ. ஏப்ரல் 1** இ. ஏப்ரல் 30 ஈ. மார்ச் 1

94. அமெரிக்காவின் மத்திய வங்கி என்பது

**அ. பெடரல் ரிசர்வ் வங்கி** ஆ. மத்திய அமெரிக்க வங்கி

இ. அமெரிக்க பங்கு நிறுவனம் ஈ. அமெரிக்க வங்கி

95. பண அளிப்பின் குறுகிய பணம் என்பது

**அ. $M_1$** ஆ. $M_2$ இ. $M_3$ ஈ. $M_4$

96. வேளாண்மை வருமான வரியை விதிக்கப்படுவது

அ. மத்திய அரசு **ஆ. மாநில அரசு**

இ. உள்ளாட்சி அமைப்புகள் ஈ. மத்திய அரசு , மாநில அரசு இணைந்து

97. ஜனவரி 2015-ல் ரிசர்வ் வங்கி எந்த வங்கியை ஆராய ஓர் உயர்மட்டக் குழுவை அமைத்தது?

**அ. நகர்புற கூட்டுறவு வங்கி** ஆ. தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி

இ. ஊரக கூட்டுறவு வங்கி ஈ. கரூர் வைசியா வங்கி

98. 12-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் கிராமப்புற வளர்ச்சிக்காக எத்தனை சதவிகிதம் பகிர்ந்தளிக்கப்பட்டது?

**அ. 4.5** ஆ. 3.5 இ. 6.0 ஈ. 7.0

99. எந்த நோக்கத்திற்காக, அண்மையில் ரிசர்வ் வங்கி பிரேசில் நாட்டுடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?

**அ. தகவல் பரிமாற்றத்திற்காக** ஆ. கருப்புப் பண கணக்குகளுக்காக

இ. பணத்தை அச்சிடுவதற்காக ஈ. புதிய தொழில் நுட்பத்திற்காக

100. உலகில் பின்வருவனவற்றுள் மிகப்பெரிய சேவை தொழில் எது?

அ. உணவு பதப்படுத்துதல் ஆ. வங்கி

இ. காப்பீடு **ஈ. சுற்றுலா**

winmeen.com